

ஸ்ரீ ருத்ரம் சமகம் – பகுதி 01
தமிழ்ப் பண்ணிசைப் பனுவல்

சிவோஹம் பாராயணத் தொகுப்பு
சிவார்ப்பண மஞ்சரி - 122. மஹாசிவராத்ரி வெளியீடு

அடியார்கள் அனைவரும் எம்பெருமானின் அருள்பெற அர்ப்பணிப்பு

சிவோஹம் சிவார்ப்பண ஞானம் - 2026 02/15 ஞாயிற்றுக்கிழமை

தமிழ்க் கவியாக்கத் தொகுப்பு ஏகம்பன்

ஸ்ரீ ருத்ரம் யஜுர் வேதத்தின் ஓர் அங்கம். மிக சிறந்த வலிமை மிகுந்த அட்சரங்களால் மிக அழகாக உருவாக்கப் பட்டுள்ளது.படித்து பயன் பெறுவது மட்டுமே நமது வேலை.கோடி கோடி நன்றிகள் இவைகளை உருவாக்கி கொடுத்த முன்னோர்களுக்கும் அவர்களுக்கு மூல காரணமாகிய இறைவனுக்கும். மிக கடினமாக காலங்களில், அதாவது ஒரு நாள் செல்வதே போதும் போதுமாகிறது, ஏதேனும் ஒரு நல்ல வழி கிடைக்காதா?... என மிகுந்த சிரமத்தில் உள்ளபவர்களுக்கு, ஸ்ரீ ருத்ரம் சொல்வது வாழ்வை மிக மிக எளிதாக்கி விடுகிறது.துயரங்கள் புறமுதுகிட்டு ஓடிவிடுகிறது. காலகாலமாக நாம் சேர்த்து வைத்த பாவங்கள் தானே நாம் இன்று எதிர்கொள்ளும் சோதனை, வேதனை, பொருள்குறைபாடு, உடல்நலமின்மை, தரித்தரம். இவை யாவும் ஓடிவிட, பாவங்கள் தீர, தரித்ரங்கள் அகல, அதற்குண்டான பிராயச்சித்தங்களை செய்ய வேண்டுமல்லவா?.

ஸ்ரீருத்ரபலன்

ருத்ரம் படித்தால் பாவம் குறைகிறது.ருத்திர மந்திரங்களால் தரித்ரங்கள் ஓட்டிவிரட்டப் படுகின்றது. பரிகாரம் அவை தாமாகவே இந்த ருத்திர மந்திரங்களால் செய்யப்படுகிறது. வாழ்வியல் தேவைகள் நிறைவேற வேண்டும் என்றால் அதனதற்குண்டான தேவதைகள் திருப்தி அடையவேண்டும் .இங்கே ருத்ரம் படிப்பதால் அனைத்து தேவதைகளும் திருப்தி அடைகின்றனர்.வேண்டியவர் வேண்டியது கிடைக்க வழிவகை செய்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக முக்திக்கு வழிவகுக்கின்றது.

எதற்கும் மூலம் சிவம்

எதற்கும் மூலம் சிவம் எனும் ஆற்றலே .சிவமெனும் சக்தியே.சிவமே யாவும்.எங்கும் சிவமே. எதிலும் சிவமே.சிவமே உம்முள்ளும், சிவமே எம்முள்ளும்,நடக்கும் அனைத்தும் சிவனின் கருணையால், சிவத்தின் சிவ மூலத்தில் எழுதிவைக்கப்பட்ட சிவனின் அன்பு அலைகளால். ஆட்சிசெய்வது சிவனின் தார்மீக அலைகள். சிவமின்றி எதுவும் இல்லை.வீடற்று , மொழியற்று ,ஆதியாய் ஆனாதியாய் ,கேட்பாரட்று சப்தமாய் நிசப்தமாய் எதற்கும் எந்த ஒரு வரைமுறை கொண்டும் வர்ணிக்க இயலாதவனாய் இருப்பவன் சிவனே.ஒவ்வொரு செயலிலும் அதற்கான மூலமும்,ஒவ்வொரு நிகழ்விலும் அதற்கான மூலமும் ,இன்பமும், துன்பமும், அழகும் ,அறிவும், தெளிவும்,ஞானமும்,ஞானத்தின் சூட்சமும் .விதியும் விதியின் மூலமும் ,மதியும் மதியின் மூலமும்,சுவையும் சுவையின் மூலமும்,பார்க்கும் கேட்கும்,தொடும் எல்லாவற்றிக்கும் மூலமாய் இருப்பவனும்,பார்க்க இயலாத தொட இயலாத , தன்மை முழுமையும் உணர இயலாத ,சூட்சுமத்தையும் அதன் மூலமாய் இருப்பவனும்,இப்படி எதற்கும் ஒரு மூலமாய் இருந்துகொண்டு இருப்பவனே சிவன் !

சிவோஹம் சிவோஹம்

ஸ்ரீருத்ரம் - தமிழில்
ஸ்ரீ கணபதி த்யானம்

ஓம் கணானாம் த்வா கணபதிஹும் ஹவாமேஹ
கவிம் கவீனா-முபமஸ்ர-வஸ்தமம்
ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத
ஆ ந: ஸ்ருண்வன்னூதிபி: ஸீத ஸாதனம்
ஓம் ஸ்ரீமஹா கணபதேய நம:

ஸ்ரீகணபதியைத் தொழுது நம் முன் எழுந்தருளச் செய்தல்

ஓம்தேவ கணங்களின் தலைவராகிய
கணபதியைப் போற்றிஅழைக் கின்றோம்
அறிஞர்க் கெல்லாம் அறிஞரே!
நிகரற்ற புகழுடை யோய்மிக்க
ஒளியுடை யோய் வேதத்திற்கு
வேத நாயகராய்த் திகழ்பவரே
எம்வேண்டு தலுக்குச் செவிசாய்த் தருள்வீர்
உமக்குரிய ஆசனத்தில் இங்குஎழுந் தருள்வீர்
மஹா கணபதியே உமக்கு வணக்கம்!

ஸஞ்ச மே மயஸ்ச மே ப்ரியஞ்சமேனு காமஸ்சமே
காமஸ்ச மே ஸௌமனஸஸ்ச மே பத்ரஞ்ச மே ஸ்ரேயஸ்சமே

வஸ்யஸ்ச மே யஸஸ்ச மே பகஸ்ச மே த்ரவிணஞ்ச மே
யந்தாச மே தர்தாச மே க்ஷேமஸ்ச மே த்ருதிஸ்ச மே

விஸ்வஞ்ச மே மஹஸ்ச மே ஸம்விச்ச மே ஜ்ஞாத்ரஞ்ச மே
ஸூஸ்ச மே ப்ரஸூஸ்ச மே ஸ்ரீரஞ்ச மே லயஸ்ச மே

மருதஞ்ச மே ம்ருதஞ்ச மே அயக்ஷ்மஞ்ச மே நாமயச்ச மே
ஜவாதுஸ்ச மே தீர்காயுத்வஞ்ச மே நமித்ரஞ்ச மே பயஞ்ச மே

ஸுகஞ்ச மே ஸயனஞ்ச மே ஸூஷாச மே ஸுதினஞ்ச மே

வாழ்க்கை நலங்களைப்பெற வேண்டுகோளினைமுன் வைத்தல்

இவ்வுலக இன்பமும் வானக இன்பமும்
இணைபிரியா பிரியமும் ஆசையது தானும்
அவ்வாசை யாலேற்படும் அனுபவத் திளைப்பும்
அன்புறு உற்றார் மங்கள்உயர் நலமும்

தெவ்விய இல்லும் புகழும் சௌபாக்ய
செல்வமும் திருவடி சூட்டும் ஆச்சார்யனும்
நவ்விடும் தாதை போன்றபரி வுடையவனும்
ரட்சிக்கும் தனமும் தைர்யனு கூலமும்

தன்மானமும் ஞானசக்தியும் போதிக்கும் திறமும்
தன்மக்களை ஏவும்திறமும் ஏவலர் பணிவும்
உன்னதமேழிச் செல்வமும் இடையூறு இல்லா
ஒப்பறிய யாகப்பல னும்பயன் அதுதானும்

மேன்மை க்ஷயரோகம் இன்மையும் குறுகிய
மேல்ஜுர(ம்) உட்ஜுர(ம்) தவிர்த்திடு மருந்தும்
அன்புச் சிநேகிதர் தொடர்பும் நீள்ஆயுளும்
அன்னிய பயமின்மை நன்னடக்கை நற்ஜயமும்

இன்புறு இறைவன் திருகழல் போற்றும்
இனிய உதயமும் தானதர்மப் பகலதுவும்
அன்புறு தியானம் நின்கழல் வைத்து
அண்டிய எனக்கு அருளுக இறைவா!

ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - முதல் அனுவாகம்

கோபமுற்ற நிலையில் இருக்கும் ருத்ரனை அமைதிப்படுத்த வேண்டிப் பிரார்த்தனை செய்து சாந்தியடைய செய்தல்

பண்: தக்கேசி **ராகம்: காம்போதி** **தாளம்: ஆதி** (12-34-56-78)

ஓம் நமோ பகவதே ருத்ராயா!

ஓம் அஞ்சலி ருத்ர பகவானே!

ஓம் நமஸ்தே ருத்ர-மன்யவ உதோத இஷேவ நம: |
நமஸ்தே அஸ்து தன்வேன பாஹுப்யா-முததே நம: || 1.1

அஞ்சலி தங்கள் சினத்திற்-கும்
அஞ்சலி தங்கள் அம்புகட்-கும்
அஞ்சலி தங்கள் தனுவிற்கும் ருத்ரா
அஞ்சலி தம்மிரு கரங்களுக்-கே 1.1

யாத இஷு: ஸிவதமா ஸிவம் பபூவ தே தனு: |
ஸிவா ஸரவ்யா யா தவ தயா நோ ருத்ர ம்ருடயா || 1.2

மங்களம் நல்கும் கணைகளும் எதுவோ
மற்றின்பமே நல்கும் தனுவதும் எதுவோ
தங்கள்அம் பறாத்தூணி தனுவும் அம்பும்
சாந்தமே கொண்டெமை இன்புறச் செய்க 1.2

யாதே ருத்ர ஸிவா தனூ-ரகோரா பாப காஸினீ |
தயா நஸ்-தனுவா ஸந்தமயா கிரிஸந்தாபிசாகசீஹி || 1.3

ஓங்கார முடியிருந்து உலகுக் கின்பம்
உதவும் ருத்ரா மங்களம் சாந்தம்
தேங்கிய பாபம்தேய முக்திநல் கும்-தங்கள்
திவ்ய வடிவெமை சுடருறச் செய்க! 1.3

யாமிஷும் கிரிஸந்த ஹஸ்தே பிபர்ஷ்யஸ்தவே |
ஸிவாம் கிரித்ர தாம் குரு மா ஹிஹிம்ஸீ:புருஷம் ஜகது|| 1.4

கயிலை அம்ர்ந்துல குக்கின்பம் நல்கியும்
கழல்பணிந் தோரை ரட்சித்துக் காத்தும்
கொலை பாபிகளை அழிதிடக் கரத்தில்
கொண்டகணை களால்உல கின்புற வேண்டும் **1.4**

ஸிவேன வசஸா த்வா கிரிஸாச்சா வதாமஸி |
யதா ந: ஸர்வ மிஜ் -ஜகதயக்ஷ்மகம் ஸுமனா அஸது || 1.5

வேதசிக ரத்தமர் மங்கள ஜோதிநின்
பாத பங்கயம் போற்றித் துதித்தோம்
காதல் உறவினர் ஆவினம் யாவும்நின்
கருணையால் நோயுற்று வாழ அருள்புரி **1.5**

அத்யேவோசததி வக்தா ப்ரதேமா தைவ்யோ பிஷகு |
அஹிம்ஸ்ச ஸர்வான் ஜம்பயன்த்-ஸர்வாஸ்ச யாது தான்ய:|| 1.6

உலக முதல்வனே தேவர்கள் தேவனே
உற்ற பிணிதீர்க்கும் மருந்துவும் நீரே!
பலபிழை செய்யினும் பக்தரை உவக்கும்
சிவமேவி ஷஅசுர பயம்தீர்த் திடுவாய் **1.6**

அஸெள யஸ்தாம்ரோ அருண உத பப்ரு: ஸுமங்கல: |
யே சேமாஹும் ருத்ரா அபிதோ திக்ஷப் ஸ்ராத: |
ஸஹஸ்ரஸொ-வைஷாஹும் ஹேட ஈமேஹே || 1.7

தாமிர வண்ணபொன் நிறமும் உடையாய்
தனிகதி ரெனஒளிர் சொருபனும் நீரே!
நேமஉல கெங்கும் ஆயிரமா யிரமாக
நிலவும் ருத்ரா சினம்தவிர்ப் பாய்போற்றி **1.7**

அஸெள யொ-வஸர்ப்பதி நீலக்ரீவோ விலோஹித: |
உதைனம் கோபா அத்ருஸன்-னத்ருஸன்னுதஹார்ய: |
உதைனம் விஸ்வா பூதானி ஸத்ருஷ்டோ ம்ருடயாதி ந: || 1.8

திருநீல கண்டமும் செந்நிறம் எவரோ
சகத்தில் மாதரும் இடையரும் மிருகமும்
தெரிசிக்க ஆதவனாய் துலங்கிடும் - ருத்ர
ஜோதியே சுகானுபவம் யாம்பெறச் செய்வீர் 1.8

நமோ அஸ்து நீலக்ரீவாய ஸஹஸ்ராக்ஷாய மீடுஷே ।
அதோ யே அஸ்ய ஸத்வானோ ஹம் தேப்யோக்ரந் நம: ॥ 1.9

கருநீல கண்டமும் கணகற்ற கண்களும்
கழல்பணி வார்க்கருள் உளமதும் கொண்ட
பெருமான் தனக்கு கணங்களா யுள்ள
புண்ணியர் தமக்கெம் அஞ்சலி அஞ்சலி 1.9

ப்ரமுஞ்ச தன்வனஸ்த்வ-முபேயா-ரார்த்னியொர்-ஜ்யாம் ।
யாஸ்ச தே ஹஸ்த இஷவ: பரா தா பகேவா வப ॥ 1.10

தங்கள்தனு வில்இரு முனைபூட் டியதான
தளரா நாண்கயிர் தளர்ந்திடச் செய்வீர்
அங்கை அம்புகள் அனைத்தும் மறைத்து
அம்பராத் தூணியிலவை உறங்கிடச் செய்வீர் 1.10

அவதத்ய தனுஸ்த்வஹம் ஸஹஸ்ராக்ஷ ஸததேஷுதே ।
நிசீர்ய ஸல்யானாம் முகா ஸிவோ ந :ஸுமனா பவ ॥ 1.11

ஆயிரமா யிரம்நய னங்களுடை யவராயும்
அம்பராத் தூணியில் பற்பலவுடை அவரெம்
தனுவின் நாணைநீக்கி அம்பினை மழுக்கி
நன்மங்கள மூர்த்தமாய் தரிசனம் தருவீர் 1.11

விஜ்யம் தனு: கபர்தினோ விஸல்யோ பாணவாஹம் உத ।
அநேஸந் நஸ்யேஷவ ஆபுரஸ்ய நிஷங்கதி: ॥ 1.12

சடையுடை பெரும்தங் களின்தனு நாண்
தளர்கஅம் பராத்தூணி தனுவற்ற தேயாகும்
விடும்கணை யாவும்சக்தி இழந்தவை யாகும்
மேவும்உடை வாள்மறை கள்உறை யுளே **1.12**

யாதே ஹேதிர்-மீடுஷ்டம ஹஸ்தே பபூவ தே தனு: | தயாஸ்மான்
விஸ்வதஸ்த்வ-மயக்ஷ்மயா பரிப்புஜ || 1.13


பக்தர்கள் உளத்தில் கீதம்நல்கும் தேவனே
பாணம்தனு கரமுள ஆயுதம் யாவும்
உக்கிரம் நீங்கிஊறு செய்யாத வையாய்
உன்கருணை யாலவை எமையென்றும் காக்க **1.13**

நமஸ்தே அஸ்த்வாயு தாயானா ததாய த்ருஷ்ணேவே |
உபாப்-யாமுத தே நேமா பாஹுப்யாம் தவ தன்வனே || 1.14

திடமுற்ற தாயினும் சித்தமில் லாதநின்
திவ்யஆ யுதம்அனைத் திற்கும் அஞ்சலி
சுடரும் தம்மிரு கரங்கள் தனுவிற்கும்
செய்தோம் அஞ்சலி ஏற்றருள் வீரே. **1.14**

பரி-தே-தன்வ்னோ ஹேதி-ரஸ்மான்-வ்ருணக்து விஸ்வத: |
அதோ ய இஷுதிஸ்தவாரே அஸ்மந்-நிதேஹி தம் || 1.15

அம்பும் வில்லும் எமைவிட்டு அகலுக
அவைவே தனைதரா தெங்கும் விலகுக
அம்புவில் தன்னில் எம்பகை வரைச்சாட
அம்பராத் தூணியை வைப்பீர் இறைவா! **1.15**



ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - இரண்டாவது அனுவாகம்

எங்கும் நிறைந்திருக்கும் தலைவனாக (திசைகளின் அதிபதி) ருத்ரனைப் போற்றுதல்.

சம்பவே நம:

நமஸ்தே அஸ்து பகவன் விஸ்வேஸ்வராய மஹாதேவாய
த்ர்யம்பகாய த்ரிபுராந்தகாய த்ரிகாலாக்நி - காலாயகாலாக்நி -
ருத்ராய நீலகண்டாய ம்ருத்யுஞ்ஜயாய ஸர்வேஸ்வராய
ஸதாஸிவாய ஸ்ரீமன் மஹாதேவாய நம: || 2.0.00

அஞ்சலி பகவானே லோக நாயகா!
அனைத்து தேவரில் உயர்மஹா தேவனே!
அஞ்சலி முக்கண் படைத்த நாயகா!
அடுதிரிபுர மெரித்த முச்சுடர் ஜோதி!

நெஞ்சக் காலாக்னி வடிவுடை தேவனே!
நீலகண்டம் தரித்த கால காலனே!
விஞ்சையாய் அனைத்திற்கும் ஈஸ்வர னாகவே!
விளங்குசதா சிவோம்மஹா தேவனே அஞ்சலி! 2.0.00

நமோ ஹிரண்ய பாஹவே
ஸேனான்யே திஸாம்ச பதயே நமோ நமோ 2.1:1

பொன்னிற அணிகள் தோளில்தரிப் பவரே
புகழ்சேனா பதியென காப்பவ ராயும்
மன்னிய திசைகளுக் கதிபதி யாயும்
வைகும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.1.1

வ்ருக்ஸேப்யோ ஹரிகேஸேப்ய:பஸூனாம் பதயே நமோ நம:2.1:2

பச்சிலைக் கேசம் உடையவ ராகவும்
பற்பல தருவின் வடிவின ராகவும்
இச்சகப் பிராணிகள் ரட்சக ராகவும்
இலகும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.1.2

நம: ஸஸ்பிஞ்ஜராய த்விஷீமதே பதீனாம் பதயே நமோ நம: 2.1:3

மஞ்சள்மே வியசெந் நிறவடி வினராயும்
வளர்காந்தி பொருந்தி திகழ்பவ ராயும்
நெஞ்சால் அர்ச்சிப்போர் இரட்சக ராயும்
நிரையும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.1:3

பப்லுஸாய விவ்யாதினே அன்னானாம் பதயே நமோ நம: 2.1:4

ரிஷபா ரூடராய் விளங்குவோ ராயும்
நிலவிரோ திகளுக்கிடர் செய்பவ ராயும்
பசைஉணவு மணிகளுக் கதிபதி யாயும்
பரவும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.1.4

ஹரிகேஸாயோபவீதினே புஷ்டானாம் பதயே நமோ நம: 2.1.5

நரையற்ற கேசம் உடையவ ராயும்
நற்பூணல் தரித்ததிரு மேனிய ராயும்
உயர்புஷ்டி உடையோர் தலைவரே யாயும்
உயர்ந்தபர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.1.5

பவஸ்ய ஹேத்யை ஜகதாம் பதயே நமோ நம: 2.1:6

இல்லறத் தருவுக்கோர் ஆயுத மாயும்
இவ்வுலகத் தின்திரு நாயக ராயும்
அல்லல்கள் போக்கும் ரட்சக ராயும்
அமைந்தபர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.1.6

நமோ ருத்ராயா ததாவினே க்ஷேத்ராணாம் பதயே நமோ நம: 2.1:7

துன்பம் தன்னைத் துடைப்பவ ராயும்
தோளின் தனுவால் உலகைக்காப் பவராயும்
மண்புதை உடல்களின் அதிபதி யாயும்
வைகும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.1.7

ஸூதாயா ஹந்த்யாய வனானாம் பதயே நமோ நம: 2.1.8

தேரினை ஓட்டும் சாரதி யாயும்
சிதையா தேகம் உடையவ ராயும்
பாரில் வனங்களின் பதியாக விளங்கும்
கருணைப்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.1.8

ரோஹிதாய ஸ்தபதயே வ்ருக்ஷாணாம் பதயே நமோ நம: 2.2.1

செந்நிறத் தினராக எங்கும் நிறைந்து
சீர்பெற யாவையும் காக்கும் செல்வராய்
கந்த தருக்களின் பதியாய் விளங்கும்
கருணைப்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.2.1

மந்த்ரிணே வாணிஜாய கக்ஷாணாம் பதயே நமோ நம: 2.2:2

நாட்டில் சிறந்தநன் மந்திரி யாயும்
நாவில் சிறந்தநல் வணிகனே யாயும்
காட்டின் பதியாய் சிறந்து விளங்கும்
கருணைப்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.2.2

புவந்தயே வாரிவஸ்க்ருதா ஔஷதீனாம் பதயே நமோ நம: 2.2.3

மக்களை பூமியில் காப்பவ ராயும்
உயர்பக்த பரா தீனரும் ஆகியும்
இலகும் தாவர ரட்சக ராகவும்
இருக்கும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.2.3

உச்சைகோஷாயா க்ரந்தயதே பத்தீனாம் பதயே நமோ நம: **2.2.4**

உரக்கக் கூவும்தொனி உடையவ ராயும்
உற்றபகை வர்கள்அழச் செய்பவ ராயும்
சிறந்த காலாட்படை தலைவரே ஆகவும்
திகழும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.2.4

க்ருத்ஸ்னவீதாய தாவதே ஸத்வனாம் பதயே நமோ நம: 2.2.5

எங்கும் வியாபித்(து) இருப்பவ ராயும்
இனியபத் தர்பின் செல்பவ ராயும்
மங்களயோ கியர்பாது காவல ராயும்
வைகும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 2.2.5

ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - மூன்றாவது அனுவாகம் அனைத்து உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் ருத்ரனைப் போற்றுதல்.

நம: ஸஹமாநாய நிவ்யாதிந ஆவ்யாதி னீனாம் பதயே நமோ நம:3.1:1

மாற்றலர் தம்மை அடக்கிடு பவராய்
மற்றுமவர் தம்மை வதைப்பவ ராயும்
மாற்றலரை வதைப்பவர் தலைவ ராயும்
வைகும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 3.1.1

ககுபாய நிஷங்கிணே ஸ்தேநானாம் பதயே நமோ நம: **3.1:2**

உயரிய தன்மைபல உடையவ ராயும்
ஓங்கிய கைவாள் ஏந்தியோ ராயும்
வியத்தகு கள்வர்கள் தலைவரே யாயும்
விளங்கும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 3.1:2

நிஷங்கிண இஷுதிமதே தஸ்கராணாம் நமோ நம: 3.1.3

தனுவினை கரத்தில் தரித்தவ ராயும்
தளராஅம் பராத்தூணி உடையவ ராயும்
துணிவுடை கொள்ளையர் தலைவராய் புவியில்
தோன்றும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 3.1:3

வஞ்சேத பரிவஞ்சதே ஸ்தாயூனாம் பதயே நமோ நம: **3.1:4**

வஞ்சனை மிக்க வஞ்சக ராயும்படு
வஞ்சக ராயும்நய வஞ்சக ராயும்
விஞ்சும் கள்வர் தலைவராய் விளங்கும்
வியத்தகுபர மாநினக்(கு) அஞ்சலி கள்பல **3.1.4**

நிசேரவ பரிசராயா ரண்யானாம் பதயே நமோ நம: 3.1.5

கொள்ளையிட உள்ளே உலவிடு வோராய்
குறியாய் திருடவெளி திரிபவ ராயும்
கள்ளர்தலை வராய்வனக் கொள்கைகள் செய்யும்
கருணைபர மாநினக்(கு) அஞ்சலி கள்பல **3.1.5**

ஸ்ரு காவிப்யோ ஜிகாஹும் ஸத்ப்யோ முஷ்ணதாம் பதயே நமோ நம 3.1:6

செருப்படை யால்தன்னைக் காப்பவ ராயும்
செய்யபிராணி கள்தம்மை வதைப்பவ ராயும்
திருடர் தலைவராய் வயல்களில் தானியம்
திருடும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல **3.1.6**

ஸிமத்ப்யோ நக்தஞ்சரத்ப்ய: ப்ரக்ருந்தானாம் பதயே நமோ நம:**3.1:7**

கூரிய வாளை ஏந்தியவ ராயும்
கொடியஇர வில்சஞ் சரிப்பவ ராயும்
வீரரை வீழ்த்தி பொருள்கவர் பவராய்
விளங்க்கிடுபர மாநினக்(கு) அஞ்சலி கள்பல **3.1.7**

உஷ்ணீ ஷிணே கிரிசராய குலுஞ்சானாம் பதயே நமோ நம: 3.1:8

தலையில் பாகை அணிந்தவ ராயும்
மலைதன்னில் வசித்தும் வயல்கள் வீடுகளில்
அலைந்து திருடும் கள்வர் தலைவராம்
அன்புபர மாநினக்(கு) அஞ்சலி கள்பல **3.1:8**

இஷுமத்ப்யோ தன்வாவிப்யஸ்ச வோ நமோ நம: 3.2:1

சரங்களை தரித்து இருப்பவ ராயும்
தனுவினை கரத்தில் உடையவ ராகிய
தனிபர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 3.2:1

ஆதன்வானேப்ய: ப்ரதிததானேப்யஸ்ச வோ நமோ நம **3.2:2**

வில்லில் நாணை எற்றுபவ ராயும்
விடும் அம்பினைத் தொடுப்பவ ராயும்
விளங்கும்பர மாநினக்(கு) அஞ்சலி கள்பல 3.2:2

ஆயச்சத்ப்யோ விஸ்ருஜத்ப்யஸ்ச வோ நமோ: **3.2:3**

தனுவில் நாணை தொட்டிழுப்பவ ராயும
சடுதியில் கனைகளை எய்பவ ராயும்
தான்திகழும் சிவமே அஞ்சலி கள்பல 3.2:3

ஸ்யத்ப்யோ விஸ்ருஜத்ப்யஸ்ச வோ நமோ நம: 3.3:**4**

குறியினை நோக்கிஅம் புவிடுபவ ராயும்
குறியை அம்பால் பிளப்பவ ராயும்
குலவும் சிவமே அஞ்சலி கள்பல 3.3:4

ஆஸீநேப்ய: ஸயானேப்யஸ்ச வோ நமோ நம: **3.2:5**

இருக்கையில் அமர்ந்து இருப்பவ ராயும்
இனிதாய் படுத்து இருப்பவ ராயும்
அல்கும் சிவமே அஞ்சலி கள்பல 3.2:5

ஸ்வபத்யோ ஜாக்ரத்ப்யஸ்ச வோ நமோ நம: 3.2.6

உறக்கத்தில் ஆழ்ந்து உறங்கிடு வோராய்
உற்றுவிழித் துக்கொண் டிருப்பவ ராயும்
உயர்ந்த சிவமே அஞ்சலி கள்பல 3.2.6

திஷ்டத்ப்யோ தாவத்ப்யஸ்ச வோ நமோ நம: 3.2:7

நிலமிசை நின்றுகொண் டிருப்பவ ராயும்
நில்லாது ஓடிக்கொண் டிருப்பவ ராயும்
நிலவும் சிவமே அஞ்சலி கள்பல 3.2:7

ஸபாப்ய: ஸபாபதிப்யஸ்ச வோ நமோ நம: 3.2:8

சபையில் அமர்ந்து இருப்பவ ராயும்
சபாநா யகராகத் திகழ்பவ ராயும்
தானேஇலகும் சிவமே அஞ்சலி கள்பல 3.2:8

அஸ்வேப்யோ அஸ்வபதிப்யஸ்ச வோ நமோ நம: 3.2:9

பரிகளே ஆகவும் பரிகள் மீதமர்ந்து
பரிகளை செலுத்து பவராக விளங்கும்
சிவமே நினக்கு அஞ்சலி கள்பல 3.2:9

ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - நான்காவது அனுவாகம் பற்றுள்ளவர்களிடமும் பற்றற்றவர்களிடமும் ருத்ரன் இருப்பதை விளக்குதல்.

நம ஆவ்யாதினீப்யோ விவித்யந்தீப்யஸ்ச வோ நமோ நம 4.1:1

சுற்றிச் சூழ்ந்து துன்புறச் செய்யும்
சக்திவடி வாய்பலவித தாக்குதல் செய்தும்
தாந்திகழும் சிவமே அஞ்சலி கள்பல 4.1:1

உகணாப்யஸ்-த்ரு ஹதீப்யஸ்ச வோ நமோ நமோ 4.1:2

சப்தகன் னியராம் சக்தி கனங்களாய்
துர்க்கை யொத்த சக்திவடி வினராகவும்
துலங்கும் சிவமே அஞ்சலி கள்பல 4.1:2

க்ருத்ஸேப்யோ க்ருத்ஸபதிப்யஸ்ச வோ நமோ நமோ 4.1.3

விஷயப் பற்றுகள் உள்ளவ ராகவும்
விஷயப் ப்ற்றுள்ளோர் தலைவரே யாகவும்
விளங்கும் சிவமே அஞ்சலி கள்பல 4.1.3

வ்ராதேப்யோ வ்ராதபதிப்யஸ்ச வோ நமோ நமோ 4.1:4

பற்பல வகுப்பினர் கூட்டங் களாகவும்
பற்பல வகுப்பின் தலைவரே யாகவும்
பாரில் விளங்கும் சிவமே அஞ்சலி 4.1:4

கணேப்யோ கணபதிப்யஸ்ச வோ நமோ நமோ 4.1:5

ப்ரதம கணங்கள் ஆகத் திகழ்ந்தும்
ப்ரபல தலைவர்கள் ஆகவும் விளங்கும்
புண்ணிய சிவமே அஞ்சலி கள்பல 4.1:5

விரூபேப்யோ விஸ்வரூபேப்யஸ்ச வோ நமோ நமோ 4.1.6

விகார வடிவுடை கணங்கள் ஆகவும்
வெவ்வேறு வடிவுடை கணங்கள் ஆகவும்
விளங்கும் சிவமே அஞ்சலி கள்பல 4.1:6

மஹத்ப்ய: ஷூல்லகேப்யஸ்ச வோ நமோ நமோ 4.1.7

சக்தி மிக்க மகனீய ராகவுமற்ப
சக்தி படைத்த தமோவர்க் கத்தராகவும்
தாமே திகழும் சிவமே அஞ்சலி 4.1.7

ரதிப்யோ ரதேப்யஸ்ச வோ நமோ நமோ 4.1.8

ரதத்தில் ஏறிபவனி வருபவ ராகவும்
இருகால் நடந்து வருபவ ராகவும்
இலகும் சிவமே அஞ்சலி கள்பல 4.1.8

ரதேப்ய: ரதபதிப்யஸ்ச வோ நமோ நம: 4.1.9

தேர்களே யாகவும் தேரின்தலை வராகவும்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 4.1.9

ஸேநாப்ய: ஸேநானிப்யஸ்ச வோ நமோ நம: 4.1.10

சேனைக ளாகவும் சேனைத்தலை வராகவும்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 4.1.10

க்ஷத்த்ருப்ய: ஸங்க்ரஹீத்ருப்யஸ்ச வோ நமோ 4.1.11

தேர்களை வழியே செலுத்து வோராயும்
திருப்பித் தடுத்து நிறுத்து வோராயும்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 4.1.11

தக்ஷப்யோ ரதகாரேப்யஸ்ச வோ நமோ நம: 4.1.12

தேர்களைச் செய்யும் தச்சர்க ளாகவும்
தேர் நிர்மாணம் செயவல்ல வராயும்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 4.1.12

குலாலேப்ய: கர்மாரேப்யஸ்ச வோ நமோ நம 4.1.13

குயவர்க ளாகவும் கொல்லர்க ளாகவும்
குலவும் சிவமே அஞ்சலி கள்பல 4.1.13

புஞ்ஜிஷ்டேப்யோ நிஷாதேப்யஸ்ச வோ நமோ நம 4.1.14

புள்ளினம் பிடிக்கும் வேடர்க ளாகவும்
மீன்களைப் பிடிக்கும் வலைஞர்க ளாகவும்
விளங்கும் சிவமே அஞ்சலி கள்பல 4.1.14

இஷுக்ருத்ப்யோ தன்வக்ருத்ப்யஸ்ச வோ நமோ நமோ 4.1.15

அம்பும் தனுவும் செய்பவ ராய்த்திகழ்
அன்புப் சிவமே அஞ்சலி கள்பல 4.1.15

ம்ருகயுப்ய: ஸ்வனிப்யஸ்ச வோ நமோ நம: 4.1.16

மிருக வேட்டை யாடுபவ ராயும்
நாய்கட்டி கயிற்றை இழுப்பவ ராயும்
விளங்கும் சிவமே அஞ்சலி கள்பல 4.1.16

ஸ்வப்ய: ஸ்வபதிப்யஸ்ச வோ நம: 4.1.17

சுணங்கன் வடிவம் த்ரிப்பவ ராகவும்
காக்கும் சுகுணரான சிவமே அஞ்சலி 4.1.17

ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - ஐந்தாவது அனுவாகம்
பிரபஞ்சத்தின் படைப்பு, காப்பு மற்றும் அழிவிற்கு ருத்ரனே காரணம் எனப் போற்றுதல்.

.

நமோ பவாய ச ருத்ராய ச 5.1.1

உலகஉற் பவத்தின் மூலவ ராகவும்
உயிரின் துன்பம் போக்குபவ ராகவும்
உகந்த சிவமே அஞ்சலி கள்பல 5.1.1

நம: ஸர்வாய ச பஸுபதயே ச 5.1.2

பாபநா சம்செய் பவராயும் ஜீவர்
பாங்குடை நாயகர் என விளங்கும்
சிவமே நினக்கு அஞ்சலி கள்பல 5.1.2

நமோ நீலக்ரீவாய ச ஸிதிகண்டாய ச 5.1.3

விடமுண்ட கரிய கண்டத்தவ ராகவும்
நீறுபூசிய வெண் கண்டத்த ராகவும்
விளங்கும் சிவமே அஞ்சலி கள்பல **5.1.3**

நம: கபர்தினே ச வ்யுப்தகேஸாய ச 5.1.4

சடைமுடி தரித்தவ ராகவும் மழுக்கை
தலைசந் யாசியாகத் தானே விளங்கும்
தவம்சேர் சிவமே அஞ்சலி கள்பல **5.1.4**

நம: ஸஹஸ்ராக்ஷாய ச ஸததன்வனே ச 5.1.5

ஆயிரம் கண்கள் உடையவ ராகவும்
அளவற்ற பற்களை கொண்டவ ராகிய
அரிய சிவமே அஞ்சலி கள்பல **5.1.5**

நமோ கிரிஸாய ச ஸிபிவிஷ்டாய ச 5.1.6

கைலை மலைமிசை உறைபவ ராயும்
கதிர் பரப்பிடும் விஷ்ணுவாய் ஒளிரும்
கருணை சிவமே அஞ்சலி கள்பல **5.1.6**

நமோ மீடுஷ்டமாய சேஷுமதே ச 5.1.7

கார் மேகமென மாரி பொழிந்தும்
கடின அம்புகள் தாங்கித் திகழும்
கருணை சிவமே அஞ்சலி கள்பல **5.1.7**

நமோ ஹ்ரஸ்வாய ச வாமனாய ச 5.1.8

குட்டை வடிவின ராகவும் வாமனக்
கோலம் தரித குள்ளரே யாகவும்
குலவும் சிவமே அஞ்சலி கள்பல **5.1.8**

நமோ ப்ருஹதே ச வர்ஷீயஸே ச 5.1.9

நெடிய வடிவம் படைத்தவ ராகவும்
நிறை குணங்கள் நிறைந்தவ ராகவும்
நிறைந்த சிவமே அஞ்சலி கள்பல 5.1.9

நமோ வ்ருத்தாய ச ஸம்வ்ருத்த்வனே ச 5.1.10

வயதில் முதிர்ந்து திகழ்பவ ராகவும்
புகழ் வானுற ஓங்கியவ ராகவும்
வைகும் சிவமே அஞ்சலி கள்பல 5.1.10

நமோ அக்ரியாய ச ப்ரதமாய ச 5.1.11

உலகம் தோன்றுமுன் இருந்தவ ராகவும்
உயர் தேவர்தம் முதல்வ ராகவும்
உயரிய சிவமே அஞ்சலி கள்பல 5.1.11

நம ஆஸவே சாஜிராய ச 5.1.12

எங்கும் நிறைந்த பரம்பொரு ளாகவும்
எத்திக்கும் எகிறி விரைபவ ராகவும்
இலகும் சிவமே அஞ்சலி கள்பல 5.1.12

நம: ஸீக்ரியாய ச ஸீப்யாய ச 5.1.13

அருவியாய் புவியில் அமைந்தவ ராயும்
ஆங்கெழும் வெள்ளமாய் திகழ்பவ ராயும்
அமைந்த சிவமே அஞ்சலி கள்பல 5.1.13

நம ஊர்ம்யாய சாவஸ்வன்யாய ச 5.1.14

அலைகளாய் வடிவம் எடுப்பவ ராயும்
அமைதியாய் நீர்நிலை திகழ்பவ ராயும்
அமைந்த சிவமே அஞ்சலி கள்பல 5.1.14

நம: ஸ்ரோதஸ்யாய ச த்வீப்யாய ச 5.1.15

ஓடைகள் தம்மில் குடியிருப்பவ ராயும்
உயர்தீவில் உலவிடு கின்றவ ராயும்
ஓங்கும் சிவமே அஞ்சலி கள்பல 5.1.15

ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - ஆறாவது அனுவாகம்
காலத்தின் வடிவாகவும் (காலரூபன்), வேதங்களின் சாரமாகவும் ருத்ரனை வணங்குதல்.

நமோ ஜ்யேஷ்டாய ச கனிஷ்டாய ச 6.1.1

மூத்தவ ராகவும் இளையவ ராகவும்
முகிழ்ந்த சிவமே அஞ்சலி கள்பல **6.1.1**

நம: பூர்வஜாய சாபரஜாய ச 6.1.2

ஆதியில் தோன்றியோ ராகவும் ஊழியில்
அழியாது இருக்கும் சிவமே அஞ்சலி **6.1.2**

நமோ மத்யமாய சாபகல்பாய ச 6.1.3

இடைக் காலத்தே உதித்தவ ராயும்முதிரா
பொருந்திய பராமா அஞ்சலி கள்பல **6.1.3**

நமோ ஜகன்யாய ச புத்னியாய ச 6.1.4

உயிர்களின் வயிற்றில் உதிப்பவ ராயும்
செடிவேரில் கிளைப்பவ ரானசிவமே அஞ்சலி **6.1.4**

நம: ஸோப்யாய ச ப்ரதிஸர்யாய ச 6.1.5

இருவினை தொடர்பிறப் புடையவ ராயும்
இயற்கை வடிவுடைய சிவமே அஞ்சலி **6.1.5**

நமோ யாம்யாய ச க்ஷேம்யாய ச 6.1.6

பாபிகளை தண்டிப்பவ ராயும் பக்தர்கட்கு
இதம்தரும் சிவமே அஞ்சலி கள்பல 6.1.6

நம உர்வர்யாய ச கல்யாய ச 6.1.7

பயிர்கள் நிறைந்த வயல்களில் இருக்கும்
பாங்காய் களத்தில் இருந்திடும் சிவமே 6.1.7

நம: ஸ்லோக்யாய சாவஸான்யாய ச 6.1.8

வேதமந் திரங்கள் போற்றப்படு பவராயும்
வேதமுடியில் விளங்கிடும் சிவமே 6.1.8

நமோ வன்யாய ச கக்ஷ்யாய ச 6.1.9

வனத்தினில் தருக்களாய் வளர்பவ ராயும்
மண்டுபுதர் செடிகொடியான சிவமே அஞ்சலி 6.1.9

நம: ஸ்ரவாய ச ப்ரதிஸ்ரவாய ச 6.1.10

ஒலிவடிவாக இருப்பவரா யும்தாமே எதிர்
ஒலிவடிவான சிவமே அஞ்சலி கள்பல 6.1.10

நம ஆஸுஷேணாய சாஸுரதாய ச 6.1.11

வேகமாய்ச் செல்லும் சேனைவடி வானவரும்
வேகமாய் ஓடும் தேரின்வடி வாய்விளங்கும்
வியத்தகு சிவமே அஞ்சலி கள்பல 6.1.11

நம: ஸூராய சாவபிந்ததே ச 6.1.12

தீரர்கள் வடிவாய்த் திகழ்ந்திடு பவரும்
தீமை செய்பவரைத் திருத்திடு பவராய்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 6.1.12

நமோ வர்மிணே ச வரூதினே ச 6.1.13


போர்க்க வசம்பூண்ட வடிவான வரும்
புறப்படும் ரதத்தில் காக்கும் இடமாய்.
உள்ள சிவமே அஞ்சலி கள்பல 6.1.13

நமோ பில்மினே ச கவசினே ச 6.1.14

தலைப்பாகை அணிந்த வடிவின ராயும்
மந்திரக் காப்பின் வடிவாய் விளங்கிப்
பரவிய சிவமே அஞ்சலி கள்பல 6.1.14

நம: ஸ்ருதாய ச ஸ்ருதஸேனாய ச 6.1.15

புனித கீர்த்தி மிக்கவ ராகவும்
புகழ்ப்பெறு ஸேனையை உடையவ ராகவும்
பொலியும் சிவமே அஞ்சலி கள்பல 6.1.15



ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - ஏழாவது அனுவாகம் ருத்ரனின் பல்வேறு வடிவங்களைப் போற்றி பாதுகாப்பு வேண்டுதல்.

நமோ துந்துப்யாய சாஹநன்யாய ச 7.1.1

பேரிகை வாத்யம் ஒலிப்பவ ராயும்
பேரிகைக் கோல்வடி வினராக விளங்கும்
புனித சிவமே அஞ்சலி கள்பல 7.1.1

நமோ த்ருஷ்ணவே ச ப்ரம்ருஸாய ச 7.1.2

போர்க்களம் தன்னில் புறமிடா தவரும்
பகைவர் ரகசியம் ஆராய்பவ ருமானத்
தான்திகழ் சிவமே அஞ்சலி கள்பல 7.1.2

.நமோ தூதாய ச ப்ரஹிதாய ச 7.1.3

செய்தியை விளக்கும் தூதரே யாகவும்
சேவையே புரியும் ஏவல்காரரே யாகவும்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 7.1.3

நமோ நிஷங்கிணே சேஷுதிமதே ச 7.1.4

உடைவா ளேந்திய கையரே யாகவும்
அம்பறாத் தூணியை உடையவ ராகவும்
உயர்ந்த சிவமே அஞ்சலி கள்பல 7.1.4

நமஸ் தீக்ஷ்ணேஷவே சாயுதினே ச 7.1.5

செவ்விய கணைகளை உடையவ ராகவும்
படைகள் தாங்கிய தேகத்தவ ராகவும்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 7.1.5

நம: ஸ்வாயுதாய ச ஸுதன்வனே ச 7.1.6

புனிதஆ யுதம்பல உடையவ ராகவும்.
போரினில் சிறந்தவில் உடையவ ராகவும்
பொலியும் சிவமே அனஜலி கள்பல 7.1.6

நம: ஸ்ருத்யாய ச பத்யாய ச 7.1.7

ஒற்றையடிப் பாதையில் செல்வபவ ராகவும்
நல்லபாதை யில்வழி போக்கரே யாகவும்
உலவும் சிவமே அஞ்சலி கள்பல 7.1.7

நம: காட்யாய ச நீப்யாய ச 7.1.8

சிறுகால் வாய்நீரில் இருப்பவ ராகவும்
சிறந்தருவி நீரில் வசிப்பவ ராகவும்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 7.1.8

நம: ஸூத்யாய ச ஸரஸ்யாய ச 7.1.9

மடுவின் நீரினில் இருப்பவ ராகவும்
ஏரியின் நீரினில் வசிப்பவ ராகவும்
வளரும் சிவமே அஞ்சலி கள்பல 7.1.9

நமோ நாத்யாய ச வைஸந்தாய ச 7.1.10

நதியின் நீரினில் இருப்பவ ராகவும்
குளத்தின் நீரினில் குலவுவோ ராகவும்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 7.1.10

நம: கூப்யாய சாவட்யாய ச 7.1.11

கிணற்று நீரினில் உறைபவ ராகவும்
நற்ச்சுனை நீரினில் இருப்பவ ராகவும்
ஒளிரும் சிவமே அஞ்சலி கள்பல 7.1.11

நமோ வர்ஷ்யாய சாவர்ஷ்யாய ச 7.1.12

மழை நீரினில் நிறைபவ ராயும்
மழையற்ற இடத்து இருப்பவ ராயும்
மகிழ்ந்து விளங்கும் சிவமே அஞ்சலி 7.1.12

நமோ மேக்யாய ச வித்யுத்யாய ச 7.1.13

மேகம் தன்னில் உறைபவ ராகவும்
மின்ன லில்ஒளி வீசுவோ ராகவும்
விளங்கும் சிவமே அஞ்சலி கள்பல 7.1.13


நம ஈத்ரியாய சாதப்யாய ச 7.1.14

பனிக்கால வானில்சஞ் சரிப்பவ ராகவும்
தகிக்கும் வெயில்மழை வடிவான வராய்
தாம்திகழ் சிவமே அஞ்சலி கள்பல 7.1.14
நமோ வாத்யாய ச ரேஷ்மியாய ச 7.1.15

மழைகாற்று வடிவாய் வீசுவோ ராகவும்
கல்மாறி வடிவாய் பொழிபவ ராகவும்
மகிழும் சிவமே அஞ்சலி கள்பல 7.1.15

நமோ வாஸ்தவ்யாய ச வாஸ்துபாய ச 7.1.16

மலைப் பொருள்கள் வடிவின ராகவும்
மனை காக்கும் வாஸ்துதேவ ராகவும்
மகிழுந் தோங்கும் சிவமே அஞ்சலி 7.1.16



ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - எட்டாவது அனுவாகம்

மங்கலமான சிவபெருமானின் வடிவத்தைப் போற்றுதல்

நம: ஸோமாய ச ருத்ராய ச 8.1.01

உமையம் மையுடன் உறைபவ ராகவும்
உலகின் துன்பம் துடைப்பவ ராகவும்
ஒளிரும் சிவமே அஞ்சலி கள்பல 8.1.01

நம: தாம்ராய சாருணாய ச 8.1.02

உதயக் கதிரொளி வண்ணத்த ராகவும்
உயர்ந்த வெண்மை நிறத்தின ராகவும்
ஒளிரும் சிவமே அஞ்சலி கள்பல 8.1.02

நம: ஸங்காய ச பஸூபதயே ச 8.1.03

இன்பமே கூட்டி வைப்பவ ராகவும்
இனிய பசுக்களின் ரட்சக ராகவும்
இலகும் சிவமே அஞ்சலி கள்பல 8.1.03

நம உக்ராய ச பீமாய ச 8.1.04

மாற்றலர் தம்மிடம் கடுமைஉள் ளவராக
மனதில் பயங்கரம் செய்பவ ராகவும்
வைகும் சிவமே அஞ்சலி கள்பல 8.1.04

நமோ அக்ரே-வதாய ச தூரே-வதாய ச 8.1.05

பகைவரை முன்னின்று வதைப்ப வராயும்
தூரத்தே இருந்து வதைப்ப ராகவும்
பரவிய சிவமே அஞ்சலி கள்பல 8.1.05

நமோ ஹ்ரந்த்ரே ச ஹ்ரநீயஸே ச 8.1.06

எங்கும் பகைவரை வீழ்த்துப வராகவும்
இறுதி ஊழியில் அழிப்பவ ராகவும்
இலகும் சிவமே அஞ்சலி கள்பல 8.1.06

நமோ வ்ருக்ஷேப்யோ ஹரிகேஸேப்யோ 8.1.07

பச்சிலை கேசமாய் உடையவ ராகவும்
பாரினில் தருக்களின் வடிவின ராகவும்
ப்ரவிய சிவமே அஞ்சலி கள்பல 8.1.07

நமஸ்தாராய 8.1.08

ஓம்காரப் பொருளின் வடிவாய் என்றும்
புவிதனில் விளங்கும் தன்மைய ரானதும்
புனித சிவமே அஞ்சலி கள்பல 8.1.08

நம: ஸம்பவே ச மயோபவே ச 8.1.09

சிற்றின்ப சுகமாய் திகழ்ப வராயும்
திகட்டாத பேரின்ப ஆன்ந்த மாகவும்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 8.1.09
நம: ஸங்கராய ச மயஸ்கராய ச 8.1.10

பிதுர்க்கள் வடிவினில் இவ்வுலக இன்பமும்
குருமார்கள் வடிவினில் பேரின்பம் நல்கும்
பொலிதிகழ் சிவமே அஞ்சலி கள்பல 8.1.10

நம: ஸிவாய ச ஸிவதராய ச 8.1.11

நமசிவாய எனும் மங்கள வடிவினரே
அடைந்த வரையே சிவமய மாக்கும்
மங்கள சிவமே அஞ்சலி கள்பல 8.1.11

நம: தீர்த்யாய ச கூல்யாய ச 8.1.12

புண்ணிய தீர்த்தங்கள் வடிவின ராகவும்
புனிதநதிக் கரையமர்ந்த மூர்த்தங்க ளாகவும்
பொலிவுறும் சிவமே அஞ்சலி கள்பல 8.1.12

நம: பார்யாய சாவார்யாய ச 8.1.13

முக்தர்கள் போற்றி துதிப்பவ ராகவும்
இல்லறத்தார் வேண்டிய பயன்நல்கு வோராயும்
முகிழ்ந்த சிவமே அஞ்சலி கள்பல 8.1.13

நம: ப்ரதரணாய சோத்தரனாய ச 8.1.14

பாபம் போக்கும் மந்திரஜப வடிவினரே
பிறவிகடல் போக்கும் ஞானவடி வினராயும்
பரவிய சிவமே அஞ்சலி கள்பல. 8.1.14

நம ஆதார்யாய சாலாத்யாய ச 8.1.15

இல்லறக் கடமையால் வாழ்வில் புகுத்துபவரே
வினைப்பயன் நுகர்பவரைத் தூண்டுபவ ராயும்
காரியப்படும் சிவமே அஞ்சலி கள்பல 8.1.15

நம: ஸஷ்ப்யாய ச பேன்யாய ச 8.1.16

நதிக்கரை இளம்புல்லில் வசிப்பவ ராயும்
நதிநீரின் நுரையில் திகழ்பவ ராயும்
நடமாடும் சிவமே நினக்கு அஞ்சலி 8.1.16

நம: ஸிகத்யாய ச ப்ரவாஹ்யாய ச 8.1.17

நதிமணல் திட்டில் அமர்பவ ராயும்
ஓடும் நீரினில் இருப்பவ ராயும்
நல்ல சிவமே நினக்கு அஞ்சலி 8.1.17

ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - ஒன்பதாவது அனுவாகம்

ருத்ரனின் நுட்பமான மற்றும் பரந்த வடிவங்களை வணங்குதல்.

நம இரிண்யாய ச ப்ரபத்யாய ச 9.1.01

களர்நில வாசிகள் வடிவில் இருப்பவரே
கடுவழி நட்ப்பவர் வடிவில் இருப்பவரே
காணும் சிவமே அஞ்சலி களபல 9.1.01

நம: கிகிம்ஸிலாய ச க்ஷயணாய ச 9.1.02

சுக்கான் பூமியில் வசிப்பவர் வடிவே
சுத்த நிலத்தில் வசிப்பவர் வடிவிலும்
தோன்றும் சிவமே அஞ்சலி கள்பல 9.1.02

நம: கபர்திநே ச புலஸ்தயே ச 9.1.03

சடாமுடி உடையவ ராகவிளங் கியும்
அடியவரைக் காக்கமுன் நிற்பவ ராகவும்
தானே விளங்கும் சிவமே அஞ்சலி 9.1.03

நமோ கோஷ்ட்யாய ச க்ருஹ்யாய ச 9.1.04

தொழுவம் தன்னில் வசிப்பவ ராகவும்
தூயஇல்லம் தன்னில் இருப்பவ ராகவும்
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 9.1.04

நமஸ்தல்ப்யாய ச கேஹ்யாய ச 9.1.05

பஞ்சணை மீதுஅம்ர்ந் திருப்பவ ராகவும்
பரந்தஉப் பரிகைமீது உறைபவ ராகவும்
பரவிய சிவமே அஞ்சலி கள்பல 9.1.05

நம: காட்யாய ச கஹ்வரேஷ்டாய ச 9.1.06

கானகம் தன்னில் வசிப்பவ ராகவும்
கடிய குகைதனில் உறைபவ ராகவும்
காணும் சிவமே அஞ்சலி கள்பல 9.1.06

நமோ ஒ ஹ்ரதய்யாய ச நிவேஷ்ப்யாய ச 9.1.07

பயங்கர மடுக்களில் இருப்பவ ராகவும்
பனித்துளி கள்மீது உறைபவ ராகவும்
பரவிய சிவமே நினக்கு அஞ்சலி 9.1.07

நம: பாகம்ஸவ்யாய ச ரஜஸ்யாய ச 9.1.08

சின்னஞ் சிறுதூசி களிலிருப்பவ ராகவும்
தெருப்புழுதி தன்னில் வசிப்பவ ராகவும்
தெய்வச் சிவமே அஞ்சலி கள்பல 9.1.08

நம: ஸுஷ்க்யாய ச ஹரித்யாய ச 9.1.09

காய்ந்த மரக்கட் டையிலுள் ளவரே
காயாத மரக்கட் டையிலுள் ளவராய்
காணப்படும் சிவமே நினக்கு அஞ்சலி 9.1.09

நமோ லோப்யாய சோலப்யாய ச 9.1.10

கட்டாந் தரையில் வசித்திடு பவரே
பச்சைப் புல்தரை யில்உறை பவராய்
களிக்கும் சிவமே நினக்கு அஞ்சலி 9.1.10

நம ஊர்வ்யாய ச ஸூர்ம்யாய ச 9.1.11

பரந்த பூமியில் தங்கியிருப் பவரே
பரவும்நதி அலையில் ஒளிர் பவராய்
பரவிய சிவமே நினக்கு அஞ்சலி 9.1.11

நம: பர்ண்யாய ச பர்ணஸத்யாய ச 9.1.12

பச்சிலை தன்னில் குடியிருப் பவரும்
பட்ட சருகிலும் வசித்திடு பவராய்
பரவிய சிவமே நினக்கு அஞ்சலி 9.1.12

நமோ பகுரமாணாய சாபிக்நதே ச 9.1.13

ஆயுதம் தாங்கிப் போர்செய் பவரும்
அனைத்து பகைவரை அழித்திடு பவராய்
அமர்ந்த சிவமே நினக்கு அஞ்சலி 9.1.13

நம ஆக்கிததே ச ப்ரக்கிததே ச 9.1.14

துன்பம் சிறிதாய் செய்திடு பவரும்
துன்பம் பெரிதாய் செய்கின் றோனாய்
துலங்கும் சிவமே அஞ்சலி கள்பல 9.1.14

நமோ வ: கிரி கேப்யோ தேவானா ஹ்ம்ருதயேப்யோ 9.1.15

பக்தருக் கருளும் மூர்த்த வடிவிலும்
பாங்குடை தேவர் இதய நடுவிலும்
பரவும் சிவமே நினக்கு அஞ்சலி 9.1.15

நமோ விக்ஷீண கேப்யோ, 9.1.16

தேவர்கள் இதய நடுவினில் அமர்ந்து
செகத்தினில் என்றும் அழிந்திடா திருந்து
திகழும் சிவமே அஞ்சலி கள்பல 9.1.16

நமோ விசின்வத் கேப்யோ 9.1.17

தேவர்கள் இதயம் தன்னில் இருந்தும்
திருவடி சார்ந்தோர் வேட்கைக் கருளும்
திவ்ய சிவமே நினக்கு அஞ்சலி 9.1.17

நம ஆநிர்ஹதேப்யோ 9.1.18

தேவர்கள் இதயம் தன்னில் அமர்ந்து
மக்களின் பாபம் தன்னை அழிக்கும்
திவ்ய வடிவாம் சிவமே அஞ்சலி 9.1.18
நம ஆமீவத்கேப்யஹ 9.1.19

தேவர்கள் இதயங்களில் இருந்த வண்ணம்.
திசைதோறும் ருத்ரக்ணங் களாய்த் திகழும்
திவ்ய வடிவாம் நினக்கு அஞ்சலி 9.1.19

ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - பத்தவாது அனுவாகம்

துயரங்களை நீக்கி மங்கலத்தை அளிக்க வேண்டுதல்.

த்ராபே அந்தஸஸ்பதே தரித்ரந்-நீலலோஹித ।
ஏஷாம் புருஷாணா - மேஷாம் பஸூனாம் மாபேர்மாரோ
மோ ஏஷாம் கிஞ்சநாமமத்|| 10.1.01

ஆதியே பாவிகட்கு நரகவேதனை அளித்தும்
ஆதிபக்தர் தமக்கு அன்னம் பாலித்தும்
ஏதிலராக தனித்து எங்கும் திரிந்தும்
எதிரிலா வறியவர் செந்நிற நீலகண்டரே

மேதினி தன்னில் மக்களும் பசுக்களும்
மேவிடும் பயமும் மரணமும் மற்றெப்
போதும் நோய்தனக்கு ஆளா காமல்
பூமியில் வாழ்ந்திட அருளுவீர் நீரே. 10.1.01

யா தே ருத்ர ஸிவா தனூ: ஸிவா விஸ்வாஹ பேஷஜீ ஸிவா ।
ருத்ரஸ்ய பேஷஜீ தயா நோ ம்ருட ஜீவஸே|| 10.1.02

பிறவிப் பிணிக்கு உயர்மருந் தாவதும்
பெரும நின்னுடன் இரண்டற இன்புறும்
சிறந்த ருத்ரரே மங்கள சக்தியுடனே
திவ்ய உருவாய் எமக்கருள் புரிவீர் 10.1.02

இமா ருத்ராய தவஸே கபர்தினே க்ஷயத்வீராய
ப்ரபராமஹே மதிம் । யதா ந: ஸமஸத் த்விபதே சதுஷ்பதே
விஸ்வம் புஷ்டம் க்ராமே அஸ்மின்னனாதுரம்|| 10.1.03

மக்களும் பசுக்களும் மங்களம் எய்தவும்
உயிர்களும் ஊர்களும் செழிப்பினை எய்தவும்
தவசீலரும் ஜடாதரும் பகைவரை அழிக்கும்
தங்களை த்யானத்தில் ஆழ்ந்துநிலைத் திடச்செய்வீர் **10.01.03**

ம்ருடா நோ ருத்ரோதநோ மயஸ்க்ருதி க்ஷயத்-வீராய
நமஸா விதேம தே யச்சம் ச யோஸ்ச மனுராயஜே பிதா
ததஸ்யா தவ ருத்ர ப்ரணீதௌ 10.1.04

எம்மை என்றும் இன்புறச் செய்வீர்
யாங்கள் மோக்ஷம் எய்திடச் செய்வீர்.
பாவிகளின் பலத்தை அழிக்கும் தங்கள்
பாதங்களில் பணிந்து வணங்கித் துதித்தோம்

அமரலோக தந்தை மனுநின் அருளால்
அடைந்த இவ்வுலக இன்பமும் மோக்ஷமும்
இம்மையில் அடைந்து அனுவிப்ப தனைத்தும்
யாங்கள் அடைந்திட அருள்வாய் (உ)ருத்திரரே ! **10.1.04**

மா நோ மஹாந்த-முத மா நோ அர்பகம் மா ந உக்ஷந்த
முத மா ந உக்ஷிதம் மா நோ வதீ: பிதரம் மோத
மாதரம் ப்ரியா மா நஸ்தனுவோ ருத்ர ரீரிஷ: 10.1.05

எங்கள்பெரி யோர்சிறுவர் துன்பம் இன்றியும்
எங்களன்னை கருசிசுக்கள் துன்பம் இன்றியும்
எங்கள்தாய் தந்தையர் துன்பம் இன்றியும்
எங்களுடல் துன்புறா வண்ண்ம் இருந்திடவும் **10.1.05**

மாநஸ்-தோகே தநயே மா ந ஆயுஷி மா நோ கோஷுமா நோ
அஸ்வேஷு ரீரிஷ: வீரான் மா நோ ருத்ர பாமிதோ-வதீர்
ஹவிஷ்மந்தோ நமஸா விதேம தே 10.1.06

எங்கள்புத் திரர்சிசுக்கள் துன்பமுற வேண்டாம்
எங்கள்ஆயுள் குறைவும் ஏற்படவும் வேண்டாம்
பசுக்களும் குதிரைகளும் துன்பமுற வேண்டாம்
எங்கள்வே லையாட்கள் துன்பமே இன்றியும்

சினம் தனிந்து காத்திட வேண்டும்
இனிய உறவுடன் வணங்கித் துதிப்போம். 10.1.06

ஆராத்தே கோக்ன உத பூருஷக்னே க்ஷயத்-வீராய
ஸும்ன-மஸ்மே தே அஸ்து ரக்ஷா ச நோ அதி ச தேவ
ப்ரூஹ்யதா ச ந: ஸர்ம யச்ச த்விபர்ஹா: 10.1.07

பசுக்களை வதைப்பதும் மக்களை வதைப்பதும்
பணியாட் கள்நலம் தம்மை சிதைப்பதும்
பயங்கர உமதுருவம் வில்கியே நிற்கவும்
உம்மங்கள் வடிவம் எம்முடன் நிற்கவும்

எங்களைக் காத்தருளும் தேவனே தங்கள்
நற்கருணை வடிவே எம்முன்னே நிற்க
இம்மை மறுமை நலம்சுகம் தரும்தேவே
எமக்கு அருளி இன்புற நல்குவீர்! 10.1.07

ஸ்துஹி ஸ்ருதம் கர்தஸதம் யுவாநம் ம்ருகந்த பீம-முபஹத்னு
முக்ரம் ம்ருடா ஜரித்ரே ருத்ர ஸ்தவாநோ அந்யந்தே
அஸ்மந்-நிவபந்து ஸேனா: 10.1.08

இதயக் கமலத்தில் உறைகின் றவரும்
இளமை பொருந்திய எழிலுடை யோராயும்
சினம்கொண்டு பகைவரை அழிக்கும் உக்ரரூபரை
சிங்கம்போல் பயங்கர வடிவுடைய வராயும்

திருவளர் கீர்த்திமிகு உருத்திரர் தம்மை
சிந்தையில் சஞ்சலமற்று துதிசெய் மனமே
அழியுமிவ் உடலில்அழி யாச்சுகம் தரும்தேவே
அழிகளம் பகைவர் பகை நீங்குகவே **10.1.08**

பரிணோ ருத்ரஸ்ய ஹேதிர்-வ்ருணக்து பரி-த்வேஷஸ்ய துர்மதி-
ரகாயோ: அவ-ஸ்திரா மகவத்ப்யஸ்-தனுஷ்வ
மீட்வஸ்-தோகாய தனயாய ம்ருடய 10.1.09

உருத்திர படைகளெமை அணுகாது விலகட்டும்
சினத்தால் சிவக்கும் ருத்திர கோபமும்
கெடுமதியும் நெருங்காது விலகிச்செல் லட்டும்
வேண்டுவோர் வேண்டுவதை விரும்பி அளிப்பவரே

வன்மையாய் பகைவரை அழித்திடும் கடுமையை
வேள்வியில் உம்மைப் போற்றியே தாள்பணியும்
எம்மிடம் கடுமை தவிர்த்து திருஅருள்
புரிய எம்முன் எழுந்தருள் புரிவீராக **10.1.09**

மீடுஷ்டம ஸிவதம ஸிவோ ந: ஸுமனா பவ பரமே வ்ருக்ஷ
ஆயுதம் நிதாய க்ருத்திம் வஸான ஆசர பிநாகம்
பிப்ரதாகஹி 10.1.10

விரும்பியவை நல்கும் நாயகமே சிவமே
பரம மங்கல வடிவாய்த் திகழ்பவரே
சீரிய ஆனந்தம் எமக்கு நல்கிடுவீர்
மாகருணை மிக்கமனம் உடைய உருத்திரரே

உயர்ந்த தருக்களில் படைக்கலன் வைத்து
புலிதோலை உடுத்தி எம்மிடத்தே வந்திடுக
பினாகம் என்னும் வில்லினை தரித்து
திருவருள் புரிய எழுந்தருள் புரிவீர் **10.1.10**

விகிரித விலோஹித நமஸ்தே அஸ்து பகவ: யாஸ்தே
ஸஹஸ்ர ஹேதயோ ன்ய-மஸ்மந்-நிவபந்து தா: 10.1.11

செல்வம் அள்ளி வாரிவழங்கு வோராயும்
சிவந்த நிறமுடை மேனிய ராகவும்
நல்லன்பு மிக்க நாதா தங்கள்
நற்றாள் போற்றி அஞ்சலி செய்தோம்

பல்லா யிரமான படைக்கலம் தம்மால்
பாரிலெம் பகைவரை அழித்திட செய்வீர் 10.1.11

ஸஹஸ்ராணி ஸஹஸ்ரதா பாஹுவோஸ்-தவ ஹேதய:
தாஸா-மீஸானோ பகவ: பராசீனா முகா க்ருதி 10.1.12

ஆயிரக் கணக்காம் ஆயுதம் கரங்களில்
ஆயிரமா யிரம்வகை ஆயுதம் உடையீர்
தாயினும் இனியஎம் பெருமானே தங்கள்
ஆயுதங்கள் எமைத்தாக் காதவண்ணம் செய்திடுவீர். 10.1.12

ஸ்ரீ ருத்ர ப்ரச்னம் - நமகம் - பதினொன்றாவது அனுவாகம்

ருத்ர கணங்களைப் போற்றுதல். இதில் "மகா மிருத்யுஞ்ஜய மந்திரம்" இடம் பெற்றுள்ளது.

ஸஹஸ்ராணி ஸஹஸ்ரஸோ யே ருத்ரா அதி பூம்யாம்|
தேஷா ஸஹஸ்ர யோஜனே வதன்வானி தன்மஸி || 11.1.01

ஆயிரக் கணக்காம் ஆயிரம் வகையாம்
அகிலம் மீதுள்ள உருத்திர கணங்களின்
ஆயிரம் யோஜனைக் கப்பால் அவர்களது
விற்கள் நாண்களை கழற்றிட வேண்டினோம் 11.1.01

அஸ்மின் மஹத்யர்ணவே ந்தரிக்ஷேபவா அதி || 11.1.02

ஸாகரம் போன்ற வான்வெளி யில்தங்கி
தவம்புரி உருத்திர கணங்கள் எவரோ! 11.1.02

நீலக்ரீவா: ஸிதிகண்டா: ஸர்வா அத: க்ஷமாசரா:|| 11.1.03

இருநிறத் தவராக வெண்மை கருமையாய்
இருந்துபா தாளத்தில் வசிப்பவர் எவரோ! 11.01.03

நீலக்ரீவா: ஸிதிகண்டா திவ ருத்ரா உபஸ்ரிதா: || 11.1.04

கண்டங் கருத்தும் வெண்நிறமுடை யவராய்
சொர்க்கத் தில்வசிக்கும் ருத்ரகணம் எவரோ! 11.1.04

யே வ்ருக்ஷேக்ஷு ஸஸ்பிஞ்ஜரா நீலக்ரீவா விலேஹிதா:|| 11.1.05

தருக்களில் இளம்புல் நிறத்தனாகத் தன்கண்டம்
கருத்து செந்நிறம் உடையவர் எவரோ! 11.1.05

யே பூதானா மதிபதயோ விஸிகாஸ: கபர்தின: || 11.1.06

பூதகணங் களின்தள பதியாக சிகையற்றும்
பெருஞ்சடை யுடைருத்ர கணங்கள் எவரோ! 11.1.06

யே அன்னேஷு விவித்யந்தி பாத்ரேஷு பிபதோ ஜனான்|| 11.1.07

உணவுகளில் இருந்து உண்ணுகின் றோரையும்
உயர்பாத் திரமிருந்து பருகுகின் றோரையும்
பீடிக்கும் உருத்திர கணங்கள் எவரோ! 11.1.07

யே பதாம் பதிரக்ஷய ஐலப்ருதா யவ்யுத: || 11.1.08

சனாதன மார்க்கம் வாழ்வோரை ரட்சிப்பவரே
தக்க மார்க்கத்தாரை என்றும் காப்பவராயும்
அன்னமிட்டுக் காப்பவரும் பகைதீர்ப் பவருமாகிய
வடிவுடை உருத்திர கணங்கள் எவரோ! 11.1.08

யே தீர்தானி ப்ரசரந்தி ஸ்ருகாவந்தோ நிஷங்கிண: || 11.1.09

ஒளிமிகு போர்ப்படை உடையவ ராகவும்
உயர் வாளுடன் நீர்நிலை காப்பவரே
உலவும் உருத்திர கணங்கள் எவரோ! 11.1.09

ய ஏதாவந்தஸ்ச பூயா ஸஸ்ச சிஸோ ருத்ரா விதஸ்திரே|
தேஷா ஸஹஸ்ர யோஜனே வதன்வானி தன்மஸி || 11.1.10

மேலேகூறப் பட்டோரும் அதிகமாய் உள்ள
எத்திக்கும் வியாபிக்கும் உருத்திர கணங்கள்
தம்விற்க் களின்நாண் களைஆயிரம் யோசனைக்கு
அப்பால் அகற்றி வைத்திக் கோருகிறோம் 11.1.10

நமோ ருத்ரேப்யோ யே ப்ருதிவ்யாம் யே ந்தரி÷க்ஷ யே திவி
யேஷாமன்னம் வாதோ வர்ஷ-மிஷவஸ்-தேப்யோதஸ ப்ராசீர்-தஸ
தக்ஷிணா தஸ ப்ரதீசீர்-தஸோதீசீர்-தஸோர்-த்வாஸ்-தேப்யோ
நமஸ்-தே நோ ம்ருடயந்து தே யம் த்விஷ்மோ யஸ்ச நோ
த்வேஷ்டி தம் வோ ஜம்பே ததாமி || 11.1.11

பூமியில்ருத்ர கண்ங்களாய் பொலிபவர் எவரோ
பொருந்திய அந்தரிக்ஷத்தில் உரைபவர் எவரோ
நேமவான் உலகினில் இருந்திடும் அன்னவர்
நெருங்கிய அன்னமும் காற்றும் மழையும்

பூமியில் உயிர்களை அழிக்கஅம் புகளானதோ
போற்றிப் பணிந்தோம் சாந்தமும் பெறவே
பத்துவிரல் கூட்டி கிழக்கினில் வந்தனம்
பணிவாய் தெற்கு திசைநோக்கி வணங்கி

சுத்தமாய் மேற்கு திசைநோக்கி வணங்கி
தொடர்ந்து வடக்கு திசைநோக்கி வணங்கி
சித்தமுயர் உயர்ந்த மேல்நோக்கி வணங்கி
தொடர்ந்து அனைவர்க்கும் அஞ்சலி செய்தோம்.

சக்தியாய் எங்களை இன்புறச் செய்வீர்
சலிப்புடன் எவரையாம் பகைத்திடு வோமோ
அடியார் எங்களைப் பகைப்பவர் எவரோ
உங்களின் திறந்தவாய் அவர்களை ஏற்கவே! 11.1.11

எங்குமாய் யாவுமாய் உள்ள முக்கண்ணனை நமஸ்கரித்தல்

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்|
உர்வாருகமிவ பந்தனான் ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்|| 11.01.12

இயற்கை நறுமணம் உடையஎம் சிவமே
மாறிலாதமாக் கருணையினால் அடியவரை வாழ்விக்கும்.
வியத்தகு முக்கண் உடையஎம் பெருமான்
வினயமாய்ப் போற்றி அஞ்சலி செய்தோம்

வேள்ளரிப் பழம்காம்பி னின்றுவிடு படுவதொப்ப
மேவியஉம தருளால் மரணத்திலிருந் துவிடுபட்டு
தெள்ளிய முக்தி நெறியில் இருந்துயாம்
திசைமாறா தென்றும் வாழ்ந்திடு வோமாக! 11.01.12

யோ ருத்ரோ அக்னௌ யோ அப்ஸு ய ஓஷ’தீஷு யோ ருத்ரோ
விஶ்வா புவ’னா விவேஶ தஸ்மை’ ருத்ராய நமோ’ அஸ்து || 11.01.13

தீயில்நீரில் இருக்கும் உருத்திரர் எவரோ
எல்லாச் செடிகொடியில் இருப்பவர் எவரோ
புவனங்கள் அனைத்தும் ஊடுருபவர் எவரோ
தூயருத்ரா உம்மைத் தொழுது அஞ்சலித்தோம் 11.1.13

தமுஷ்டுஹி யஃ ஸ்விஷுஃ ஸுதன்வா யோ விஶ்வ’ஸ்ய க்ஷய’தி
பேஷஜஸ்ய’ | யக்ஷ்வா”மஹே ஸௌ”மனஸாய’ ருத்ரம் னமோ”பிர்-
தேவமஸு’ரம் துவஸ்ய || 11.1.14

சிறந்த அம்பும் தனுசும் உடையவரோ
உலகின்பிணி தீர்க்கும் மருந்தின் இருப்பிடமோ
துயர்தரு அசுரர்தமை அழிப்பவர் தம்மை
துதிசெய்து போற்றி அஞ்சலி செய்தோம்.

நயம்தரும் நல்மனம் யாம்பெறு தற்காக
நாயகன் உருத்திரன் தன்னையே நாங்கள்
உயர்வுறு அஞ்சலி செய்துமே யாங்கள்
உவப்புடன் பூசனை செய்திடு வோமே 11.01.15

அயம் மே ஹஸ்தோ பக’வானயம் மே பக’வத்தர꞉ | அயம் மே”
விஶ்வபே”ஷஜோஉயக்ம் ஶிவாபி’மர்ஶன꞉ || 11.01.15

எம்முடை கரமே இறைவநின் ஸ்வரூபம்
கண்ணுக்கு முன்காட்சி தரும்இறை வடிவம்
எம்முடை கரங்கள்சகல பிணிக்கும் மருந்தே
அதுவே திருமேனி தீண்டும்பாக் கியம்பெற்றது. 11.1.15

யே தே’ ஸஹஸ்ர’மயுதம் பாஶா ம்றுத்யோ மர்த்யா’ய ஹன்த’வே |
தான் யஜ்ஞஸ்ய’ மாயயா ஸர்வானவ’ யஜாமஹே || 11.1.16

உலகையே அழித்திடும் உருத்திர மூர்த்தியே
உயிர்களை அழித்திட ஆயிரம் பத்தாயிரம்
இலகிடும் பாசக் கயிறுகள் எவையோ
எமைவிட்டு விலக-யாகத் தால்தொழு திடுகின்றொம். 11.1.16

ம்ருத்யவே ஸ்வாஹா’ ம்ருத்யவே ஸ்வாஹா” |
ஓம் நமோ பகவதே ருத்ராய விஷ்ணவே ம்றுத்யு’ர்மே பாஹி ||11.1.17

மரணத்தின் அதிபதியே! இந்தஓர் அர்ப்பணத்தை
கருத்துடனே சமர்ப்பிப் பதாகஆ கட்டும்
மரணத்தின் அதிபதியே! இந்தஓர் அர்ப்பணத்தை
சிறப்புடனே சமர்ப்பிப் பதாகஆ கட்டும்

ஓம்பக வானும்எங் கும்நிறைந் தவராகிய
பரமா உருத்திரா அஞ்சலி கள்பல
தகவுடை எம்மிடம் மரணம் வராமல்
தயவுடன் காத்தருள் புரிவீர் நீரே! 11.1.17

ப்ராணானாம் க்ரன்திரஸி ருத்ரோ மா' விஶாந்தக꞉꞉ |
தேனான்னேனா''ப்யாயஸ்வ || 11.1.18

இந்திரிய ப்ராண வாயுக்கள் அனைத்தும்
ஒன்றாக சேர்ந்து முடிபோடும் இடமாக
இருக்கும் இடத்தில் இருந்திடும் ருத்ரா


எந்தையே எம்மிடம் புகுந்துறை வீராக
யாமுண் ணும்அன் னமாகிய ஆகுதியால்
அகம்நிறைந் தென்னை காத்தருள் வீராக

ஸதாஶிவோம் |

ஓம் ஸாந்தி: ஸாந்தி: ஸாந்தி:

ப்ரார்த்தனை

தன் உடல் மற்றும் மனம் மூலம் ஏற்படும் துன்பங்கள் நமக்கு அப்பாற்பட்ட இயற்கைச் சக்திகள் அல்லது தெய்வச் செயல்களால் ஏற்படும் துன்பங்கள், மற்ற உயிர்னங்கள் மற்றும் பஞ்ச பூதங்களால் ஏற்படும் துன்பங்கள் ஆகிய மூவகைத் துன்பங்கள் யாவையும் தகர்த்து எப்போதும் இடைவிடாது இன்பமும் ஆனந்தமும் நிம்மதியும் சாந்தமும் அருள்வீராக



ஸ்ரீ ருத்ரம் சிறப்பு

ஸ்ரீருத்ரம் ஈஸ்வரனை போற்றும் மிகமிக உயர்நிலை மந்திரமாகும். ஸ்ரீ ருத்ரம் தத்தமது துன்பத்தை போக்குவதோடு முக்தியையும் அளிக்கவல்லது என்பதை பெரியபுராணம் காட்டுகின்றது. பல சிதிலமடைந்த சிவாலயங்களில் சுவாமிக்கு குளிர குளிர ருத்ராபிஷேகம் செய்தபின், பல அருட்ப்பணிகள் நடந்து கும்பாபிஷேகம் நடந்துள்ளன என்பது அனைவரும் அறிந்ததே. அதேபோல் தடைப்பட்ட திருப்பணிகள் பூர்த்தி அடையவும் ருத்ர ஹோமம் செய்வது பலன் அளிக்கவல்லது என்பது நிதர்சன உண்மை.

ஸ்ரீ ருத்ரம் சாந்தி மந்திரமாகவும், ஸகல பாவங்களையும் போக்கும் பிராயச்சித்த மந்திரமாகவும் விளங்கி வருகிறது. வேதபுருஷனுக்கு ஸ்ரீருத்ரம் கண்ணாகவும், அதனுள் இருக்கும் பஞ்சாக்ஷரம் கண்மணியாகவும் விளங்குவதாக ஹரதத்தாச்சாரியார் போற்றுகின்றார்.

ஸ்ரீ ருத்ரம் என்னும் துதி யஜுர் வேதத்தில் உள்ளது. இது நமகம், #சமகம் என இரண்டு பகுதிகளை உடையது.இறைவனிடம் என்ன வேண்டுவது என்று திணறுபவருக்கு இது ஒரு பெரிய பட்டியலைத் தருகிறது.இது பற்றிய மிகவும் அற்புதமான விஷயம் என்னவென்றால் நல்ல தூக்கத்தையும் தருக என்று இறைவனை வேண்டுவதாகும்.
மேலை நாடுகளிலும் இந்திய நகரங்களிலும் வாழ்பவருக்கு இன்று அரிதான பொருள் நல்ல நிம்மதியான உறக்கம் ஆகும்.பலவித கவலைகளாலும் இயந்திரம் போன்ற வாழ்வாலும் மனிதர்கள் கஷ்டப் படுகிறார்கள். இதை ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்த நம் முன்னோர்கள் அழகாக வரிசையாக சமகம் என்னும் பகுதியில் பட்டியல் இட்டுவிட்டார்கள்.

நமகம் என்னும் பகுதியில் சிவ பெருமானை நூற்றுக் கணக்கான பெயர்களால் நமஸ்கரிக்கிறோம். இதனால் இதை சத ருத்ரீயம் என்று அழைப்பர்.சமகம் என்னும் பகுதியில் நமக்கு வேண்டியவற்றை எல்லாம்

கேட்கிறோம். இதைக் கேட்டாலேயே போதும். அத்தனையும் கிடைத்துவிடும்.

சிவன் கோவில்களில் அபிஷேக நேரத்தில் இதைப் பாராயணம் செய்வார்கள். இந்துக்களின் முக்கிய சடங்குகள் அனைத்திலும் ருத்ர பாராயணம் நடைபெறும்.

நமகம் என்னும் பகுதியில் 194 நம: வரும்

சமகம் என்னும் பகுதியில் 328 சமே வரும்.

நமகம் பகுதியில் சிவனை 300 பெயர்களால் வணங்குகிறோம்.

ருத்ரத்துக்கும் 11 என்ற எண்ணுக்கும் தொடர்பு மிக அதிகம்.

ஏகாதச ருத்ரர்கள் என்று ருத்ரர்களின் எண்ணிக்கை கணக்கிடப்படுவதால் குறைந்தது 11 தடவையும், அதிகமாக இதன் பல மடங்குகளிலும் பாராயணம் செய்வர்.


ஸ்ரீருத்ரம் 174 ரிக்குகளைக் கொண்டது. இதில் 32 மஹா மந்திரங்கள் இருக்கின்றன.

ருத்ரத்தில் 11 பிரிவுகள் (அநுவாகங்கள்), சமகத்தில் 11 பிரிவுகள் இருக்கின்றன.

ருத்ரத்தின் 11 அநுவாகங்களில் எட்டாவது அநுவாகத்தில் நமச்சிவாய என்ற மஹா மந்திரம் வருவதால் அந்த இடம் வரும் போது முழுக் கவனத்தையும் செலுத்தி உரத்த குரலில் கூறுவர்.

11ஆவது அநுவாகத்தில் மரண பயத்தை நீக்கும் ம்ருயுஞ்ஜய மந்திரம் (ஓம் த்ரயம்பகம் யஜாமஹே—) வருகிறது.

ஸ்ரீ ருத்ரத்திற்கு சாயணர், பட்ட பாஸ்கரர், அபிநவ சங்கரர் ஆகிய பெரியோர்கள் பாஷ்யம் (விளக்க உரை) எழுதியிருக்கிறார்கள்.



ஸ்ரீ ருத்ர ஜபம், ஹோமம், அபிஷேகம் செய்வதால் ஏற்ப்படும் பலன்கள்:

ஸ்ரீ ருத்ர ஜபம், ஹோமம், அபிஷேகம் செய்பவர்கள் பஞ்சமாபாதகங்களில் இருந்தும் விடுபடுகிறார்கள். அஞ்ஞானம் ஒழிந்து ஆத்மஞானம் பெறுகின்றனர். இயற்கை வளம், நாடு நலம், மழை வளம், கொடிய நோய்களிலிருந்து விடுபடுதல், நரம்பு சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணம், குடும்பத்தில் தடைபெற்ற காரியங்கள் நிவர்த்தி பெறவும், சுப நிகழ்ச்சிகள், உத்தியோகம், தொழில், வியாபார அபிவிருத்தி, கணவன் மனைவி ஒற்றுமை போன்ற பல்வேறு நன்மைகள் பெறலாம்.

ஸ்ரீ ருத்ரத்திற்கு ஈடுஇணை வேதத்திலும் சரி, ஸ்மிருதியிலும் சரி கிடையாது என்று சூதசம்ஹிதை கூறுகின்றது. இத்தகைய அதி உன்னதமான ஸ்ரீ ருத்ரம் ஜபித்து ருத்ர ஹோமமும், ருத்ராபிஷேகமும் செய்வது அதி உன்னத பலனை தரவல்லது.

பரம உன்னதமான ஸ்ரீ ருத்ரம் முறைப்படி ஜபிக்கும்பொழுது, ஏற்படும் ஸப்த ஒலி அலை அதிர்வுகளும், ருத்ர யாக தீயிலிருந்து வரும் ஒளிக்கதிர்களும், புகை மண்டலமும் பிரபஞ்சமாகிய உலகை தூய்மை படுத்துவதுடன், உலக வாழ்வில் ஏற்படும் கஷ்டங்கள், துன்பங்களை அகற்றி சர்வ இஷ்ட சித்திகளை அளிக்கின்றது.

ருத்ர பூஜையின் உண்மையான அர்த்தமும் அதன் மஹத்துவமும்:

ருத்ர ஜெபம் என்பது ஆகாசத்திலிருந்து (அண்டவெளி) பதிவிறக்கம் செய்யப்பட்ட பழமையான ஒரு மந்திர உச்சாடனம். பழங்காலத்தில் ரிஷிகளும், முனிவர்களும் தியானத்தில் அமர்ந்த போது அவர்கள் காதில் கேட்டவற்றை எல்லாம் மற்றவர்களுக்கு மாற்றி அளித்தனர். ருத்ர ஜெபத்தின் விளைவு என்னவென்றால் அது நேர்மறை சக்தியை

உருவாக்கி, எதிர்மறை அதிர்வுகளை நீக்கிவிடும். ருத்ர ஜெபத்தை பற்றி நிறைய சொல்லப்பட்டிருக்கின்றது. அது நடக்கும்பொழுது இயற்கை வளம் பெறுகின்றது. இயற்கை ஆனந்த மயமாகவும் மகிழ்ச்சியாகவும் மாறுகின்றது.

இதில் முக்கியமானது அதிர்வுகளே. உச்சரிக்கப்படும் எல்லா மந்திரங்களுக்கும் அர்த்தம் உங்களுக்குத் தெரியுமா என்று என்னைக் கேட்டால் எனக்கும் தெரியாது. மந்திரங்கள் ஓதும்போது அவற்றின் பொருளை விட அவற்றால் உண்டாகும் அதிர்வுகளே முக்கியம்.

அதில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன. முதல் பாகம் 'நமோ, நமோ. நமோ, நமோ' என்று சொல்கின்றது.'மன' என்றால் மனம். ஆங்கில வார்த்தை 'mind' என்பது சம்ஸ்கிருத வார்த்தையான 'மன' என்பதிலிருந்துதான் வந்திருக்கின்றது. மன என்பதனை திருப்பிப் படித்தால் நம என்று வருகின்றது தனது ஆதாரமான மூலத்தை நோக்கித் திரும்பிச் செல்லும் மனம் 'நம' எனப்படுகின்றது. வெளியில் உலக அனுபவங்களை நோக்கிச் செல்லும்போது 'மன' என்று சொல்லப்படுவதே திரும்பி உள்ளே ஆதாரத்தை நோக்கிச் செல்லும்போது 'nama' எனப்படுகின்றது. மனம் தனது ஆரம்ப மூலத்தை அடைந்ததும் அனைத்துமே ஒன்றால் ஆக்கப்பட்டவை என்பதை அறிந்து கொள்கின்றது.

இன்றைய விஞ்ஞானிகள் என்ன சொல்கின்றார்கள்? அனைத்துமே இறைத்துகள்கள் என்னும் ஒன்றால் ஆக்கப்பட்டவை என்று சொல்கிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இதையே ரிஷிகளும் சொல்லி இருக்கின்றார்கள். ஆணுமல்லாத பெண்ணுமல்லாத அதனை அவர்கள் ப்ரம்மம் என்றழைத்தார்கள். அது ஒரு தத்துவம். அனைத்துமே அந்தப் ப்ரம்மத் தத்துவத்தாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றன. அதுவே ஒவ்வொன்றினுள்ளும் இருக்கும் சிவ தத்துவம் எனப்படுகின்றது.

ஆகவே தான் ‘நமோ, நமோ’ என்று சொல்லப்படுகின்றது. மரங்கள், பசுமையான செடிகொடிகள், பறவைகள், கள்வர்கள், கொள்ளைக்காரர்கள் என்று அனைத்திலும் எங்கும் நிறைந்திருப்பது அந்த ஒரே தத்துவம் தான்.

அடுத்து இரண்டாவது பாகம் ‘சமே, சமே, சமே, சமே’ என்று சொல்கின்றது. இதை நீங்கள் கேட்டிருக்கின்றீர்கள் இல்லையா? அனைத்தும் என்னுள் இருக்கின்றது என்று இதற்குப் பொருள். ஆங்கில வார்த்தை ‘me’ என்பதும் ‘ம’ என்னும் சம்ஸ்கிருத வார்த்தையிலிருந்து தான் வந்துள்ளது. இரண்டாவது பாகம் அனைத்துமே எனக்காக என்னால் ஆக்கப்பட்டுள்ளது என்று சொல்கின்றது. எண்கள் ‘ஏகாச்சமே’ அதாவது ஒன்று, இரண்டு, மூன்று,, நான்கு என்னும் அனைத்தும் என் வடிவமே. அதே போல் ‘சுகம்சமே’ என் மகிழ்ச்சி, ‘அபயஞ்சமே’ அஞ்சாமை, ஆனந்தம், ஆரோக்கியம் மற்றும் பிரபஞ்சத்திலுள்ள எல்லா நல்ல விஷயங்களும் என்னைச் சேர்ந்தவையே.

இவ்வாறு மந்திரம் ஓதும் போது பொதுவாக பால், தயிர், இளநீர் போன்ற அபிஷேக திரவியங்கள் சிவலிங்கத்தின் மீது சொட்டு சொட்டாக வழிய விடப்படுகின்றது. இது ஒரு பழங்கால முறை. இது நீர் அல்லது நெருப்புடன் செய்யப்படுகின்றது. நெருப்பு மூட்டப்பட்டு பல விதமான ஆகுதி பொருட்கள், காயகல்ப மூலிகைகள் வெவ்வேறு மந்திரங்களுக்கேற்ப அதில் இடப்படுகின்றன. அல்லது மந்திர உச்சரிப்பை கவனிக்கும் நேரத்தில் தண்ணீர் ஒரு நூலிழை போல லிங்கத்தின் மேல் வழிய விடப்படுகின்றது..

சிவோஹம் சிவோஹம்

சிவோஹம் சிவார்ப்பணம்

இவன் ஏகம்பன்

REFERNECE & BOOKS:

- SRI RUDRAM BY SRI ANNA
- SRI RUDRAM BY REVATHI BALASUBRAMANIAN
- SOME WEBSITE BLOGS....

திருச்சிற்றம்பலம்